## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (ஏப்ரல்/மே 2016)

### SAS 3133 சமூகத்தின் சமூகவியல்
### Sociology of Religion

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி-I ல் இருந்து 03 வினாக்களுக்கும் பகுதி-II ல் இருந்து 01 வினாவிற்கும் எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

### பகுதி-I

01.(அ) சமயம், சமய நம்பிக்கைகள் முதலான எண்ணக்கருக்களை வரையறுப்பதில் நிலவும் சிக்கல்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) சமயம் தொடர்பில் கருத்துரைத்த சமூகவியலாளர்களுள் குறைந்தது நால்வரைத் (04) தெரிவு செய்து, சமயம் தொடர்பான அவர்களின் முதன்மையான சிந்தனைகளை முன்வைக்குக.

(15 புள்ளிகள்)

02.(அ) குலக்குறிய வழிபாடு (Tolemism) தொடர்பில், எமில் டேர்க்கீம் (Emile Durkheim) முன்வைத்த கருத்துகளை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) மனித உணர்வுகளை ஆற்றுப் படுத்துவதில், சமயம் வகிக்கும் வகிபாகத்தை மலினோவஸ்கி எவ்வாறு எடுத்துக் காட்டியுள்ளார்? விளக்குக.

(15 புள்ளிகள்)

03.(அ) தற்போதைய உலக மயமாதற் சூழலில் சமய வழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைச் சுருக்கமாக இனங்காண்க.

(10 புள்ளிகள்)

(ஆ) "நேர்த்திக்கடன் சடங்கு முறைகளுக்கு" பின்னால் தொக்கி நிற்கும் சமூக உளவியல் அம்சங்களைப் பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

04.(அ) “புதிய சமய மரபுகள் (cults)” என்னும் எண்ணக்கருவை வரையறுத்து அவற்றின் தனித்துவமான குணாம்சங்களையும் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ)யாத்திரை இயற்றுதலின் சமூகவியல் அம்சங்களை நடைமுறை உதாரணங்களுடன் விபரிக்குக.

(15 புள்ளிகள்)

## பகுதி-II

01. “சமயமானது சமூக ஒருங்கிசைவு (Social Integration) சமூக கட்டுப்பாடு (Social control), சமுதாய ஒப்புரவு (Social Morality) ஆகியவற்றுக்கு ஓர் உறுதியான நிலைக்களனாகத் திகழ்கிறது.” என்னும் எமில் டோர்க்கீமின் இக்கூற்றானது, இன்றைய சமகாலச் சமூகச் சூழலிலும் பொருத்தமுடையதா என்று மதிப்பீடு செய்க.

02. “பெண்ணைத் தெய்வமாக்கி வழிபடும் சமய நிறுவனம், மறுதலையாக, பெண் ஒடுக்கு முறைக்கும், பெண்களின் சமூக அபிவிருத்தியை தடுப்பதற்கும் கூட வழிவகுக்கிறது.” இக்கருத்தினை நீர் ஏற்றுக்கொள்வீரா? இது தொடர்பில் ஒரு விமர்சனபூர்வமான கலந்துரையாடலை மேற்கொள்க.

*****